**தலைப்பு 004- மேல்நீதிமன்ற நீதிபதிகள்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முணைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 004 - மேல் நீதிமன்ற நீதிபதிகளின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக்கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கானநிதிச் செயலாற்றல் கூற்று மற்றும்காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் மேல்நீதிமன்ற நீதிபதிகளின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேல் நீதிமன்ற நீதிபதிகளின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முணைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முணைப்பழியுள்ளதாகப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் தணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் நிறுவனத்தின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல்ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன.என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொறுண்மையான பிரழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிரழ்கூற்றுக்கினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டினைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும்பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்ட.

எனது கணக்காய்வில் இனங்காணபபட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகிறது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டுள்ளன எனவும்.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதும், அத் தேவைபாடுகளிலிருந்து விலகிய சந்தர்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2022 திசெம்பர் 13 திகதிய இலக்கம் 2022/05 கொண்ட அரச கணக்குகள் வழிகாட்டி 7.5 பந்தி பிரகாரம் 2022 திசெம்பர் 31 திகதியன்று நிதி செயலாற்றல் கூற்றின் மீதி, கட்டுநிதி இணக்க கூற்றின் பிரகார மீதி மற்றும் ஆண்டிறுதி கட்டுநிதி மீதியின் கூட்டுத் தொகைக்கு சமமாக வேண்டிய போதும், நிதி செயலாற்றல் கூற்றில் திசெம்பர் 31 திகதியன்று ரூபா 1,425,420 ஆன கட்டுநிதி மீதி காட்டப்பட்டிருக்கவில்லை. | - | அரச கணக்குகள் வழிகாட்டி பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியன்று ஏசீஏ – 3 இல் திறைசேரி புத்தகம் பிரகாரம் கட்டுநிதி மீதி ரூபா 1,425,420 ஆக காட்டப்பட்ட போதும், நிதி நிலைமை மீதான கூற்றில் அது வழிக் காசாக மூலதன சொத்துக்களின் கீழும், கட்டு நிதி மீதியாக நடைமுறை பொறுப்பின் கீழும் காட்டப்பட்டிருக்கவில்லை. | | கட்டுநிதி மீதியைநிதி நிலைமை மீதான கூற்றில் சரியாக காட்ட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள

#### (அ) மீண்டெழும் செலவினம்

நிதிக்கூற்றுக்களிற்குரிய மீண்டெழும் செலவினம் கணக்கீடு செய்யப்படும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| ரூபா 100,000 ஆன வாகனத் திருத்தச் செலவுகள் மூலதன சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தல் செலவுகளாக காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டுவதற்கு பதிலாக முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இக்காரணத்தால் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப் பாய்ச்சல் அப் பெறுமானத்தால் குறைத்தும் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழான காசுப் பாய்ச்சல் அப் பெறுமானத்தால் அதிகமாகவும் காட்டப்பட்டிருந்தது. | மூலதன சொத்துக்கள் புனர்நிர்மாணம் மற்றும் மேம்படுத்தலின் கீழ் வாகன செலவின விடயத்தில்ரூபா 100,000 தொகை செலவிடப்பட்டுள்ளதுடன், இது மூலதன தன்மையிலான செலவொன்றாகையில் காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டை கைபற்றிக் கொள்ள உள்ளடக்கியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சலில் சரியான வகைப்படுத்தலின் கீழ் தரவுகளை உட்படுத்த வேண்டும். |

#### (ஆ) மூலதன செலவினம்

நிதிக்கூற்றுக்களிற்குரிய மூலதன செலவினம் கணக்கீடு செய்யப்படும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| காசுப் பாய்ச்சல் கூற்றில்முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் பௌதீக சொத்துக்கள் நிர்மாணம், கொள்வனவு மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் பெறுமதி ரூபா 82,920 ஆன போதும் ரூபா 182,920 ஆக ரூபா 100,000 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | இது தொடர்பாக அரச கணக்குகள் திணைக்களத்தின் ஆலோசனை பிரகாரம் எதிர்வரும் ஆண்டுகளில் நடவடிக்கை எடுக்க செயற்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றிற்கு சரியான தரவுகளை உட்படுத்த வேண்டும். |

**(இ) ஏடுகள் மற்றும் புத்தகங்கள் முறையாக பேணப்படாமை**

திணைக்களம் பின்வரும் பதிவேடுகள்முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லைஎன்பது மாதிரிகணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| **வாகன சம்பவக் குறிப்பு புத்தகம்** | | |
| நிதிப்பிரமாணம் 1645(அ) இன் பிரகாரம 12 வாகனங்களில் சம்பவக்குறிப்பு புத்தகங்கள் நாளாதுவரையாக்கப்பட்டிருக்க வில்லை. | 04 வாகன விபத்துக்கள் மீதான விபரங்கள் குறித்த வாகனத்தில் வாகன சம்பவ குறிப்பு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேல் நீதிமன்ற நீதிபதிகளின் அனைத்து வாகனங்களிற்கும் உரியவாகன சம்பவ குறிப்பு புத்தகங்களை நாளாதுவரையாக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. இந்த வாகனங்களிற்குரிய பிரயாணங்களின்மாதாந்த பொழிப்பு, வருடாந்த அனுமதிப்பத்திரம் மற்றும் வாகன திருத்தங்கள் தொடர்பான அனைத்து தகவல்களும் வாகன சம்பவக் குறிப்பு புத்தகத்தின் உள்ளடக்கி நாளாதுவரையாக்கி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சம்பவ குறிப்பு புத்தகங்களை நாளாதுவரையாக்கி பேணிச் செல்ல வேண்டும் |

**2. நிதி மீளாய்வு**

**2.1 செலவின முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 02 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 04 மூலதன செலவின விடயங்களிக்கான ரூபா 2,400,000 ஆன மொத்தஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது. | 2022 ஏப்ரல் 26 கொண்ட அரச செலவின கட்டுப்பாடு மற்றும் தேசிய பாதீட்டு இலக்கம் 05/2022 கொண்ட சுற்றறிக்கை ஊடாக தொடர்ச்சியாக வழங்கப்பட்ட ஆலோசனை மற்றும் அறிவூட்டலின் பிரகாரம் கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள், வாகனங்கள், இயந்திர மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக இயலுமான அளவில் செலவினத்தை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும்,அதன் போது நாட்டில் | சரியான ஆய்வொன்றுடன் கூடியதாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிலவிய அரச பொருளாதார உறுதியற்ற நிலை காரணமாக மூலதன செலவினத்தை முழுமையாக கட்டுப்படுத்த முயற்சி எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 08 மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் 05 மூலதன செலவின விடயங்களிற்கானரூபா 14,990,000 ஆன ஏற்பாடுகளிலிருந்து ரூபா 7,695,383 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டு இருந்ததுடன், அந்த சேமிப்பு 38 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சளவை கொண்டிருந்தது. | மதிப்பிற்குரிய உயர் நீதிமன்ற மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகளின் உள்நாட்டு பிரயாணம் மற்றும் வெளிநாட்டு பிரயாண செலவு விடயத்திற்கான ஏற்பாடு நாட்டில் நிலவிய கொவிட் நிலைமை காரணமாக மட்டுப்படுத்த நேர்ந்ததால் ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.மதிப்பிற் குரிய உயர் நீதிமன்ற மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் 2022 ஆண்டிற்காக எதிர்பார்த்த வாறு அரச ஆதனக் கடன் கோராததால் ஆதனக் கடன் வட்டி செலவு விடயத்தின் ஏற்பாடு சேமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | உரிய ஆய்வொன்றுடன் கூடியதாக செலவின மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) | 004-1-1-1301 மீண்டெழும் செலவு விடயத்திற்காக மீள்நிரப்பு ஏற்பாட்டின் மூலம் 7,976,000 ஆன ஏற்பாடு பெறப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரமாணம் 66 மூலமும் ரூபா 410,000 மாற்றிக் கொண்டிருந்த போதும் அவற்றில் ரூபா 367,420 ஆன ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. இந்த சேமிப்பு மாற்றல் பெறுமதியின் 90 சதவீத அளவாகும். | வாகன செலவு விடயத்திற்காக மீள்நிரப்பு ஏற்பாடின் மூலம் பெற்றுக் கொண்ட ரூபா 7,976,000 தொகை முழுமையாக வாகன திருத்தத்திற்காக பயன்படுத்தப்பட்டு உள்ளதாவும், நி.பி. 66 மூலம் மாற்றிய தொகையிலிருந்து செலுத்த எதிர்பார்த்திருந்த வவுசர்கள் உரிய வாறு பூர்த்தி செய்து வருட இறுதி திகதிக்கு கணக்கு பிரிவிற்கு கிடைக்காததன் மீது அந்த அளவை செலவிட முடியாதிருந்ததாக அறிவிக்கப்பட்டிருந்தது. | போதிய அளவாக ஏற்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும். |
| (ஈ) | 2022 ஏப்ரல் 26 ஆம் திகதிய இலக்கம் 03/2022 கொண்ட தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 03(xvii) பந்தி பிரகாரம் ஆண்டினுள் செலவு செய்வதற்காக | 2022 ஆண்டினுள் காகிதாதிகளின் விலைகள் எதிர்பாராத விதமாக அதிகரித்தமை, எரிபொருள் விலை மாதாந்தம் | சுற்றறிக்கை ஆலோசனையை பின்பற்றுவது தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளில் சேமிப்பு காணப்படின் அவை ஆண்டிறுதிக்கு முன்பு ஏனைய செலவினங்களிற்கு பயன்படுத்தக்கூடா போதும், 06 செலவின விடயங்களிற்குரியதாக ரூபா 6,260,000 ஆன ஏற்பாடு நிதிப்பிரமாணம் 66 மூலம் ஏனைய செலவின விடயங்களிற்கு மாற்றப்பட்டிருந்தது. | அதிகரித்தமை, மதிப்பிற்குரிய நீதிபதிகளின் கடமைப் பணிகளிற்காக பயன்படுத்தும் வாகன திருத்தங்களின் உதிரிப் பாகங்களின் விலை அதிகரித்தமை காரணமாக அந்த செலவின விடயங்களின் ஏற்பாடு நிலுவையை தவிர்த்துக் கொள்ள இங்கு குறிப்பிட்டுளள செலவின விடயங்களிலிருந்து நி.பி. 66 மூலம் ஏற்பாடு மாற்றிக் கொள்ளப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | |

**2.2 பொறுப்புக்கள் மற்றும்கட்டுப்பாடுகளை மேற்கொள்ளல்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | SA 92 திரண்ட பொறுப்பு அறிக்கையில் காட்டியள்ள ரூபா 479,871 பெறுமதியான பொறுப்புக்கள், 2022 திசெம்பர் 31 திகதியிலான பொறுப்புக்கள் மீதான கூற்றில் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கி இருக்கவில்லை. | இந்த வவுசர பத்திரம் தவறுதலாக சிகாஸ் நிகழ்சித் திட்டத்திலிருந்து இரத்துச் செய்தல் இடம் பெறாததால் அத் தவறை பின்னர் சரிசெய்யப்பட்டுள்ளது. | சரியான பொறுப்பு பெறுமதிகள் நிதிக்கூற்றினுள் மற்றும் பொறுப்பு பதிவேட்டில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றில் திசெம்பர் 31 திகதியன்று கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை (இணைப்பு iii) உள்ளடக்கி இருக்கவில்லை. | - | கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றை (இணைப்பு iii) நிதிக்கூற்றில் உள்ளடக்க வேண்டும். |
| (இ) | இரண்டு செலவின விடயங்களிற்கு உரிய 2022 ஆண்டிற்கான ரூபா 91,000 வை 2023 ஆண்டில் செலுத்தியிருந்த போதும், அப் பொறுப்பு நிதிக்கூற்றில் பொறுப்புக்கள் கூற்றில் மற்றும் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கியிருக்கவில்லை. | இச்செலவு 2022/12 மாதம் செய்யப்பட்டுள்ள போதும் வவுசர் பத்திரம் கணக்கு பிரிவிற்கு சரியான முறையில் கிடைக்காமை மற்றும் தவறின் காரணமாக பொறுப்புக்கள் கூற்றில் தவறுதலாக உள்ளடக்கப்பட வில்லையென அறிவிக்கப்பட்டு இருந்தது. | பொறுப்புக்கள் சரியாக வெளிப்படுத்தப்பட வேண்டும. |

## 2.3 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்/ கணக்கீட்டு உத்தியோகத்தரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (i) | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டப்பாட்டு தொகுதியொன்றை தயாரித்து பேணிச்செல்வதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதி செய்ய வேண்டியதுடன் அத் தொகுதியின் ஆக்கபூர்வ தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதன் பிரகாரம் தொகுதியை பயனுறுதிமிக்கதாக பேணிச்செல்ல தேவையான மாற்றங்களை மேற்கொள்ள வேண்டியதாகவும், அம் மீளாய்வுவை எழுத்து மூலமாக மேற்கொண்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிருந்த போதும், அவ்வாறான மீளாய்வுகள் மேற்கொண்டதற்கான கூற்றுக்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மாதாந்தம் சமர்பிக்கப்பட வேண்டிய அறிக்கை, கணக்காய்வு ஐயவினாவிற்காக பதில் அறிக்கை மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் உரியவாறு தயாரிக்கப்பட்டு கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்களை உரிய நேரத்தில் தயாரித்தல் இடம்பெறுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன், அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டிய போதும், அறிக்கையின் 3.2 பந்தியில் குறிப்பிடப்படும் கணக்காய்வு அவதானிப்பு காரணமாக அத்தேவைப்பாட்டை மேற்கொண்டிருக்கவில்லை. | 2021 ஆண்டில் கணக்காய்வளர் நாயகத்தின் பொழிப்பறிக்கை 2022 ஜுன் 02 திகதி கிடைத்துள்ளதாகவும், செயலாற்றுகை அறிக்கை மும்மொழிகளிலும் மொழி பெயர்த்து 2022 செப்டம்பர் 09 திகதி பிரதமரின் செயலகத்திற்கு அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டு உள்ளதாகவும், 2022 நவம்பர் 02 திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2.4 சட்டங்கள் விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

மாதிரிக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விபரமாகக் காட்டப்பட்டுகிறது.

**அவதானிப்புக்கள**

| | சட்டங்கள் விதிகள்பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | இணக்கமின்மைகள | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|---|
| **(i)** | **நியதிச் சட்ட ஏற்பாடுகள்** | | | | |
| | 1982 இன் 43 இலக்க முத்திரை வரிச் சட்ட ஏற்பாடுகள் | 6,389,842 | 34 சந்தர்ப்பங்களில் மேற்கொண்ட ரூபா 25,000 இற்கு அதிகமான கொடுப்பனவுகளிற்காக சட்ட பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வவுசர் பத்திரங்கள் முததிரை ஒட்டப்பட்டு பூரணப்படுத்தி உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது . | முத்திரை வரிச் சட்ட ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(ii)** | **பொது நிர்வாக சுற்றறிக்கை** | | | | |
| | 2006 ஜுலை 14 திகதிய இலக்கம் 11 கொண்ட சுற்றறிக்கையின் 03 (IV) பந்தி | | அலுவலர்களுக்கு இணைக்கப்பட்டுள்ள 25 வாகனங்களிற்கு சுற்றறிக்கையின் இணைப்பு 02 பிரகாரம் அறிக்கை ஒன்று மாதாந்தம் தயாரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பொது நிர்வாக சுற்றறிக்கை 11/2006 பிரகாரம் உத்தியோகபூர்வ வானங்கள் தொடர்பாக எடுக்க வேண்டிய முயற்சிகள் பிரகாரம் இணைப்பு 02 இல் குறிப்பிடப்படும் ஆவணங்களை பூர்த்தி செய்ய மதிப்பிற்குரிய மேல்நீதிமன்ற நீதிபதிகளிற்கு அந்த ஆவணங்களை சமர்பிக்க அனுப்ப இயலாதுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 31 திகதிய இலக்கம் 30/2016 கொண்ட சுற்றறிக்கையின் 3.1 பந்தி | 12 வாகனங்கள் தொடர்பாக எரிபொருள் பாவனை பற்றிய பரிசோதனை மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | மதிப்பிற்குரிய மேல்நீதிமன்ற மற்றம் மேன்முறையீட்டு நீதிபதிகள் பயன்படுத்தி உத்தியோகபூர்வ வாகனங்கள்ஆகையால், இது வரை எரிபொருன் பரிசோதனை மேற்கொள்ளவில்லை என அறிவிக்கப்பட்டு இருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**2.5 முற்பண வழங்கல் மற்றும் தீர்ப்பனவு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 01/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 9.1 (ஆ) பிரகாரம் உப கட்டுநிதியொன்றை வழங்கியதன் பின்னர் குறித்த பணியை பூர்த்தி செய்து 10 நாட்களுக்குள் அக் கட்டுநிதியை மீண்டும் தீர்க்க வேண்டிய போதும், 08 சந்தர்ப்பங்களில் வழங்கிய ரூபா 95,800 ஆன உப கட்டுநிதியை தீர்க்க 01 மாதம் முதல் 3 மாதங்களும் 17 நாட்கள் வரையான கால வீச்சளவொன்றை எடுத்திருந்தது. | உப கட்டுநிதி அநேகமான சந்தர்ப்பங்களில் பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ இல்ல நடவடிக்கைகளுக்கு வழங்கியுள்ளதுடன், அது தொடர்பாக குறித்த அலுவலர்களை அறிவூட்டியதாகவும் எதிர்காலத்தில் உரியவாறு தீர்க்க தேவையான நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் பிரகாரம் நிமித்த உப கட்டுநிதியை கால தாமதமின்றி தீர்க்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட சுற்றறிக்கையின் 03 பந்தி பிரகாரம் அங்கீகார மதிப்பீட்டை நடைமுறைப்படுத்த எதிர் வரும் ஆண்டில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்து நடைமுறை ஆண்டின் திசெம்பர் 15 திகதிக்கு | 2022 ஆண்டின் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டதை தயாரித்து 2022 சனவரி 27 திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்திற்கு | சுற்றறிக்கை பிரகாரம் உரிய தினத்திற்கு வருடாந்த செயல் நடவடிக்கைதிட்டத்தை ததயாரித்து |

| | | | |
|---|---|---|---|
| | முன்னர் பிரதான கணக்கீடு உத்தியோகத்தரிற்கு சமர்பித்து அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள வேண்டிய போதும், 2022 ஆண்டின் செயல நடவடிக்கை திட்டததை 2023 ஏப்ரல் 28 திகதி சமர்பிக்கப்பட்டு இருந்தது. | அனுப்பியுள்ளதுடன், அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் நாயகத்திற்கும் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சமர்பிக்கவேண்டும். |
| (ஆ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையில் வருடாந்த செயல நடவடிக்கை திட்டதிதை தயாரிப்பது தொடர்பாக வழிகாட்டி இலக்கம் 12 பிரகாரம் வருடாந்த செயல நடவடிக்கைதிட்டத்தினுள் உள்ளடக்க வேண்டிய விடயங்களை உள்ளடக்கியிருக்க வில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் 2023 ஆண்டிற்காக செயல நடவடிக்கை திட்டத்தைதயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுளளது. | வழிகாட்டி பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைதிட்டத்தை ததயாரிக்கவேண்டும். |

## 3.2 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 2/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் பொது நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியதாக இருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள** |
|---|---|---|
| சுற்றறிக்கையின் 12.1 பந்தி பிரகாரம்வருடாந்த செயலாற்றுகை அறிக்கை நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்னர் மற்றும் 2022 மே 26 திகதிய PFD/RED/REG/02/CC/2022 நிதி அமைச்சின் கடிதம் பிரகாரம் 2021 ஆண்டில் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை,நிதி ஆண்டு முடிவடைந்து 150 நாட்கள் செல்ல முன்னர் பாராளுமன்றத்தில் முன்வைப்பதற்காகஅனுப்ப சிரமமொன்று ஏற்பட்டால், அதனை 2022 ஜுன் 30 வரை கால நீடிப்பு செய்துள்ள போதும், 2020 மற்றும் 2021 ஆண்டிற்காக வருடாந்த செயலாற்றுகைஅறிக்கை பாராளுமன்றத்திற்கு 2022 நவம்பர் 02 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | 2021 ஆண்டின் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பறிக்கை 2022 ஜுன் 02 திகதி கிடைத்துள்ளதுடன்,வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை மும் மொழிகளிலும் மொழி பெயர்த்து 2022 செப்டம்பர் 09 திகதி பிரதமர் அலுவலகத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுபப்பட்டுள்ளதுடன், 2022 நவம்பர் 02 திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் செயலாற்றுகை அறிக்கையை உரிய திகதியில் பாராளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 திகதிய இலக்கம் 02/2020 கொண்ட பொது நிதி சுற்றறிக்கையின் 04 பந்தி பிரகாரம் வருடாந்த பெறுகைகள் திட்டத்தை நடைமுறையாண்டின் திசெம்பர் 10 திகதிக்கு முன்னர் தயாரித்து கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பிக்க வேண்டிய போதும் 2022 ஆண்டின் பெறுகைகள் திட்டம் 2023 ஏப்ரல் 28 திகதி சமர்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் பெறுகைகள் திட்டம் 2022 சனவரி 26 திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுடன், அதன் பிரதியொன்று கணக்காய்வாளரிற்கும் அனுப்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| (ஆ) | 2006 அரச பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 4.2.1(இ) பிரிவின் பிரகாரம் மற்றும் மேற் குறிப்பட்ட சுற்றறிக்கையின் வழிகாட்டி 13 பிரகாரம்அடுத்து வரும் ஆண்டிற்கான பெறுகைகள் நடவடிக்கைகளை விரிவாக காட்டும் வகையில்பெறுகைகள் திட்டத்தை தயாரித்திருக்கவில்லை. | 2023 ஆண்டிற்காக விரிவான செயல் நடவடிக்கை திட்டத்தை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |

### 3.4 சொத்தக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 01/2020 கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 11.1 பந்தி மற்றும் நிதிப்பிரமாணம் 756(6) பந்தி பிரகாரம் வருடாந்த பண்டக கணிப்பீட்டை மேற்கொண்டு பூர்த்தி செய்யும் கால எல்லையை காண்பித்திருந்த போதும் திணைக்களத்தினால் வருடாந்த பண்டக கணிப்பீட்டை அக் கால எல்லை பிரகாரம் மேற்கொள்ளப்பட்டிருக்வில்லை. | 2022 ஆண்டிற்குரிய பண்டக கணிப்பீட்டு நடவடிக்கைகளை முடிவுறுத்தியுள்ளதுடன், தற்பொது பண்டக கணிப்பீட்டு அறிக்கையை ஒப்படைத்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை பிரகாரம் பண்டக கணிப்பீடு உரிய கால எல்லை பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்ளல்.

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|
| 2018 ஏப்ரல் 27 திகதிய இலக்கம் MSDW 08/65 கொண்ட நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் திணைக்களத்தினால் 2022 ஆண்டிற்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு அந்த நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை ஒருங்கிணைக்க அலுவலர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தைதயாரித்திருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் சுட்டிகளை இனங்கண்டு நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதனை ஒருங்கிணைக்க அலுவலர்களை நியமித்து நிலைபேறான அபிவிருத்தி நிகழ்சித் திட்டத்தை தயாரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்ததது. | நிலைபேறான அபிவிருத்தி மற்றும் வன சீவராசிகள் அமைச்சினால் வெளியிடப்பட்ட கடிதம் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்தி வேலைத் திட்டத்தை தயாரிக்க வேண்டும் |

## 5. நல்லாளுகை

### 5.1 பொது மக்களிற்காக சேவைகளை மேற்கொள்ளல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள |
|---|---|---|---|
| (அ) | 2022 சனவரி முதல் திசெம்பர் வரை மேல்நீதிமன்றத்தில் தீர்க்கப்பட இருந்த மொத்த வழக்குகளின் அளவு 6,678 ஆன போதும், அக் காலத்தினுள் தீர்க்கப்பட வழக்குகளின் அளவு 1,196 ஆனதில் 2022 திசெம்பர் 31 திகதியன்று மேலும் தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் அளவு 5,482 ஆனது. அதாவது வருட ஆரம்பத்தில் தீர்க்கப்பட இருந்த வழக்குகளிற்கு ஒப்பாக தீர்க்கப்பட்டுள்ள வழக்குகளின் அளவு 18 சதவீதமளவு குறைந்த சதவீதமானது. | மேல்நீதிமன்றத்தில் 2022 சனவரி 01 திகதியன்றுதீர்க்கப்படவுள் ள மொத்த வழக்குகளின் அளவு 5,021 ஆவதுடன், 2022 ஆண்டினுள் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் அளவு 1,657 ஆகும். 2022 ஆண்டினுள் தீர்க்கப்பட மொத்த வழக்குகளின் அளவு 1,196 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டினுள் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் 72 சதவீதமொன்று முடிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் செயலாற்றுகையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2022 சனவரி முதல் திசெம்பர் வரை மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் தீர்க்கப்பட இருந்த மொத்த வழக்குகளின் அளவு 4,595 ஆன போதும், அக் காலத்தினுள் தீர்க்கப்பட வழக்குகளின் அளவு 1,172 ஆனதில் 2022 திசெம்பர் 31 திகதியன்று மேலும் தீர்க்கப்படவுள்ள வழக்குகளின் அளவு 3,423 ஆனது. அதாவது வருட ஆரம்பத்தில் தீர்க்கப்பட இருந்த வழக்குகளிற்கு ஒப்பாக தீர்க்கப்பட்டுள்ள வழக்குகளின் அளவு 26 சதவீதமளவு குறைந்த சதவீதமானது. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் 2022 சனவரி 01 திகதியன்றுதீர்க்கப்படவுள் ள மொத்த வழக்குகளின் அளவு 3,563 ஆவதுடன், 2022 ஆண்டினுள் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட மொத்த வழக்குகளின் அளவு 1,032 ஆகும். 2022 ஆண்டினுள் தீர்க்கப்பட மொத்த வழக்குகளின் அளவு 1,172 ஆகும். அதன் பிரகாரம் ஆண்டினுள் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து வழக்குகளும் மற்றும் முன்னைய ஆண்டுகளிற்குரிய 40 வழக்குகளும் முடிவுறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தின் செயலாற்றுகையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 5.2 உள்ளக கணக்காய்வு

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகிறது.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள** |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கொண்ட தேசிய கணக்காய்வு சட்டத்தின் இலக்கம் 40(1) பிரிவின் ஏற்பாடுகள் பிரகாரம் திணைக்களத்தின் உள்ளக கணக்காய்வு அலகொன்றைஇஸ்தாபிக்க நடவடிக்கை எடுத்திருக்காததுடன், உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்திருக்கவில்லை. | அமைச்சின் உள்ளக கணக்கய்வு பிரிவினால் கணக்காய்வு நடவடிக்கைகள் மெற்கொள்ளப்படுகிறது. உள்ளக கணக்காய்வு பிரிவொன்றை வேறாக இஸ்தாபிக்க கவனம் செலுத்தியுள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. | தேசிய கணக்காய்வு சட்டம் பிரகாரம் உள்ளக கணக்காய்வு பிரிவொன்று இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |